REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 162

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மார்கழி 4உ சனி (19—12—58) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 5உ ஞாயிறு (20—12—58)

"'திராவிட நாடு' கோரிக்கை நியாயமானதே"

'புதிய கல்வித் திட்டம் வாழ்க்கையையே பாழாக்கிவிடும்'

'யாரும் அசைக்க முடியாத கோட்டைக்குள் இருக்கிறார் ஆச்சாரியார்'

விழுப்புரம், டிச. 18—

"தமிழ் மொழியானது எந்த மொழியுடனும் தொடர்பில்லாதது; தனித்து நிற்கும் அருமையான மொழி; மற்ற மொழிகளெல்லாம் சமஸ்கிருதத்தைத் தூக்கி நிற்கின்றன."

"தமிழ் நாடும், இதர மொழி அல்லது இன அடிப்படையிலுள்ள இதரப் பகுதிகளும், கண்டிப்பாக, பிரிந்தே ஆகவேண்டும்."

"மொழிவழியாகவும், இனவாரியாகவும் பார்த்தால், 'திராவிட நாடு' கோரிக்கை சரிதான். திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட தமிழகம் அமைய வேண்டும்; அதைக் கண்ட பிறகுதான் என் மனம் சாந்தி அடையும்."

"பொதுவில் இந்திய கல்வி முறையே மோசம். அரைகுறை படிப்பை வைத்து மாணவர்கள் முன்னுக்கு வரமுடியாது. மேல் நாட்டுக் கல்விமுறையே சிறந்தது."

"தற்போது வந்துள்ள புதிய கல்வித் திட்டம் வெறும் 'சர்க்கா' (ராட்டை) சுற்றும் ஆதாரக் கல்வியே! இந்தக் கல்வித் திட்டம் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையையே பாழாக்கிவிடுமே! மேல் நாட்டு அறிஞர்களுடனும், நம் நாட்டுக் கல்வி நிபுணர்களுடனும் ஆலோசித்து ஒரு நல்ல திட்டத்தை அரசாங்கம் வகுத்து அமுலாக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் முன்னேற முடியும்."

"ஆச்சாரியாருடைய உச்சக் குடுமியை யார் பிடித்தாலும் அவர் தப்பித்துக்கொள்வார். இது புரியும்படி கூற முடியாத விஷயம்; அவரைச் சுற்றிப் பெரும் மதிற்சுவர்கள் இருக்கின்றன; அதனால்தான் அப்படிச் சொல்லுகிறேன்."

—மேற்கண்டவாறு விழுப்புரத்தை அடுத்துள்ள குறிச்சிப்பாளையம் என்ற ஊரில் நடைபெற்ற ஒரு விழாவுக்குத் தலைமை வகிக்க வந்த சுத்தானந்த பாரதி, பேட்டி கண்ட பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:—

"இப்போது ஆந்திரப் பிரிவினை நடைபெற்றவிதம் சரியல்ல; நமது அரசாங்கத்தார் இது விஷயத்தில் தமிழருக்குத் துரோகம் செய்துவிட்டனர்! தமிழர்களுக்குச் சொந்தமான பல ஊர்களை ஆந்திரத்துடன் சேர்த்து விட்டதாக எண்ணுகிறேன். புதுச்சேரி, நாஞ்சில் நாடு, திருப்பதி, திருத்தணி, மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த சில பகுதிகள், தமிழக அமைப்பின்போது, தமிழகத்தோடு சேர்க்கப்பட வேண்டும்."

—'தி. த.'

கெய்ரோ, டிச. 17—

கெய்ரோ நகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் பொதுவுடமைக் கட்சியினர் செயல்களில் ஈடுபட்டதாகக் கூறி 43 இளைஞர்களை உள்நாட்டுப் பாதுகாப்புப் போலீஸ் படையினர் கைது செய்துள்ளனர்.

இறக்குமதி கிடையாதாம்!

காரச்சி, டிச. 9—

சனல் பொருள்கள் எதையும் அடுத்த ஆண்டில், பாகிஸ்தான் இறக்குமதி செய்யாது என்று தெரிகிறது. சனல் பொருள்களில், சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் நிலைமையில் பாகிஸ்தான் இருக்கும் எனத் தெரிகிறது.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி

★

இதுவரை சேர்ந்துள்ளது

ரூ. 7373-11-6

ஒரு மாவட்டத்தில் மட்டும்!

தென் ஆற்காடு மாவட்டத்தில் தொடரப்பட்ட மதுவிலக்கு வழக்குகள் மொத்தம் 4,688. அதன் மூலம் சர்க்கார் அபராதம் வசூலித்தது, ரூ 89,823-12-6.

அபிவிருத்தித் திட்டம்—நமக்கல்ல!

சில்சார், டிச. 19—

மணிபூர் மாநிலத்தில், மலை ஜாதியினர் பிரதேச அபிவிருத்திக்காக இந்திய சர்க்கார் ரு 90 லட்சம் ஒதுக்கியுள்ளனர்.

கல்வி அபிவிருத்திக்காக ரு. 1. 70 லட்சம், சுகாதார அபிவிருத்திக்கு ரு. 1. 50 லட்சம், பாதைகள் அபிவிருத்திக்கு ரு. 4 லட்சம்; சேவை பயிற்சிக்கு ரு. 11 லட்சம்.

கைத்தறி துணிகளுக்கு நல்ல வாய்ப்பு!

லட்சுமணபுரி, டிச. 19—

இந்திய கைத்தறித் துணிகளுக்கு பிரிட்டனில் நல்ல வாய்ப்பு இருந்து வருவதாக தகவல் கிடைத்துள்ளது. முக்கியமாக, படுக்கை விரிப்புகள், கைக்குட்டைகள், மேஜை விரிப்புகள், டவல்கள் ஆகியவைகள்தான் அதிகமாக வாங்கப்படுகின்றனவாம்.

நிலையான சி. ஆர். ஆட்சி நடைபெற வேண்டியதின் அவசியம்!

நிலவரி அமைச்சர் சப்பைக்கட்டு இரகசியம்!

சென்னை, டிச 18—

மந்திரி இராமநாதபுரம் ராஜாவின் மகள் பத்மினிக்கு வைத்தியச் செலவிற்காக ரு 18 செலவிட்டுள்ளனர்.

மந்திரி மாணிக்கவேலருக்கு சிகிச்சை செய்ய ரு 55-ம், மந்திரி சுப்ரமணியத்தின் குழந்தைகளுக்கு சிகிச்சை செய்ய ரு 52-ம் அரசாங்கப் பணம் செலவிடப்பட்டது.

இத்தகவல் நேற்று சட்டசபையில் வெளியிடப்பட்டது.

சென்ற ஆண்டு மந்திரிகளுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் இலவச வைத்தியச் செலவு ரு 369—10—0 என்று செலவிடப்படுகிறது. இதில் முன்னாள் மந்திரி நாகண்ணகவுடர் பெயருக்கான செலவு ரு. 241—10—0 எனத் தெரிய வருகிறது.

நிலையில்லா பேச்சு!

வாஷிங்டன், டிச. 16—

சிற்சில சந்தர்ப்பங்களில் அமெரிக்காவின் அணு ஆயுதங்களையும், அணு இரகசியங்களையும் நேச நாடுகள் உபயோகித்துக் கொள்ள அமெரிக்கா இணங்கக்கூடுமென்று இன்று ஜனாதிபதி ஐசனோவர் கூறினார்.

பம்பாய் துறைமுகங்களுக்கு ரூபாய் 36 லட்சம்

ஆனால் சென்னைக்கும், ஆந்திராவிற்கும் சேர்த்து ரூபாய் $10\frac{1}{4}$ லட்சம்தான்

யூனியன் சர்க்காரின் மாற்றாந் தாய் போக்குக்குக் கண்டனம்!

"உலகம் கடலைக் கண்டு அஞ்சிக் கிடந்த காலத்திலேயே, கடலை அடக்கியாண்டு, தமிழர் தம் வளத்தையும், திறத்தையும் மேனாடுகள் கண்டு திகைக்கச் செய்ததுடன், கடற் படையினால் அவர்களை அஞ்சவும் செய்து வாழ்ந்தது, தமிழ் நாடாகும்! காவிரிப் பூம்பட்டினம், தொண்டி போன்ற பண்டைத் துறைமுகங்கள், மேனாட்டு வணிகர் கூட்டத்தினால் புழங்கக் கிடந்தனவென்று இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. ஆனால், இன்று காவிரிப்பூம்பட்டினம், மகாபலிபுரம் போன்ற பண்டைத் துறைமுகங்கள், தமிழர்களின் நிலையைப் போன்றே கேட்பாரற்றுக் கிடக்கின்றன. உண்மையான தமிழர் ஆட்சி, தமிழ் ஆட்சியுடன் பிணைந்து எழும்போதுதான், காவிரிப்பூம்பட்டினம் போன்ற பழைய துறைமுகங்கள் புதுப்பிக்கப்பட்டு, தமிழகக் கடற்கரையில் மேலும் பல சிறு துறைமுகங்கள் நிறுவப்படும் போலும்!

இந்தியாவின் தென் கோடியில் அமைந்துள்ள நமது சென்னை மாநிலம், இருபுறமும் கடலால் சூழ்ந்த நன்னிலமாகும். இந்தியாவின் கடற்பாதுகாப்புக்கு மையம் போன்று விளங்குவது நமது மாநிலக் கடற்கரையேயாகும்; ஆகவே, சென்னை மாகாணத்தில், மற்ற மாகாணங்களைவிட, அதிகமான அளவில் துறைமுகங்களை நிறுவுவதும், ஏற்கனவே உள்ள துறைமுகங்களை முன்னேற்றமடையச் செய்வதில் தனித்த அக்கறையும் மத்திய அரசாங்கத்தினர் கொண்டிருக்க வேண்டியதே முறையாகும். ஆனால், மத்திய அரசாங்கத்தின் போக்கும், நடைமுறையும் இதற்கு மாறாகவே இருக்கிறது. இந்த உண்மை, இந்திய அரசாங்கத்தின் அண்மைய நடவடிக்கையால் விளங்குகிறது."

"கடற்கரையையுடைய இந்திய மாகாணங்களிலுள்ள சிறிய துறைமுகங்களின் வளர்ச்சிக்காக, மத்திய அரசாங்கம், இம்மாகாணங்களுக்கு ரு 80 லட்சம் தொகையைக் கடனாக அளிக்கயிருக்கிறது. இக்கடனுக்கு, முதல் 12 ஆண்டுகளுக்கு வட்டி செலுத்தத் தேவையில்லை. அதன் பிறகு, ஆண்டொன்று, 4½ சதவிகிதப்படி வட்டி செலுத்தப்பட வேண்டும். இந்தச் சலுகையுடன் இக்கடன் அளிக்கப்படுகிறது."

"மேற் குறிப்பிட்ட ரூ. 80 லட்சம் தொகையில், பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த ஓகா எனும் துறைமுகத்தின் வளர்ச்சிக்காக மட்டும் ரூ. 20 லட்சம் ஒதுக்கப்படுகிறது. இந்தியாவிலுள்ள மற்ற எல்லா துறைமுகங்களினுடைய வளர்ச்சிக்காக ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மிகுந்துள்ள ரு 10 லட்சம், இருப்பில் வைத்திருக்கப்படுமாம். ஆனால, இத்துறையில், சென்னைக்கும், ஆந்திராவுக்குமாகச் சேர்ந்து ரூ. 10.39 லட்சம் தொகைதான் குறிக்கப்பட்டுள்ளது. இத்தொகையிலும், சென்னையின் பங்கு எவ்வளவு என்பது, கணிக்கப்பட்டு வருகிறதாம். பம்பாய் மாகாணத்திற்கு மட்டும், மேற்கண்ட ரூ 20 லட்சம் மட்டுமல்லாமல் ஓகா தவிர்த்த மற்ற சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்காக மேலும் ரூ 16 லட்சம் மத்திய அரசாங்கம் கடனாகக் கொடுக்கயிருக்கிறது."

—இவ்வாறு, மதுரையிலிருந்து வெளிவரும் 'தமிழ் நாடு' தினசரி, அன்றைய தலையங்கத்தில் தீட்டியுள்ளது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 19—12—53 சனி

வெறும் சிபாரிசு!

ஒரு நரி, நண்பனான நாரையை, விருந்துண்ணத் தனது வீட்டிற்கு அழைத்தது; நாரையும் ஒப்புக்கொண்டது.

நல்ல விருந்து கிடைக்கப் போகிறது என்ற நம்பிக்கையுடனும், மட்டற்ற மகிழ்ச்சியுடனும் நரியின் குடிலுக்குச் சென்றது நாரை.

நரியின் பிறவி குணம் மாறுமா என்ன? நண்பர் ஒட்டார் என்ற நல்ல புத்தி நரிக்கு ஏது? தனது சுய காரியம்தானே நரிக்கு முக்கியம்? அதுதானே, அதன் ஜன்மக் கூறு?

வட்டமான இரு தட்டுகளில், பாயாசத்தை ஊற்றி வைத்துவிட்டு, நாரையைப் பருகுமாறு நரி உபசரித்தது. நாரை பருகத் துவங்கிவிட்டதா, இல்லையா என்பதைக்கூட கவனிக்காமல், நரி, தனது தட்டில் இருந்த பாயாசத்தை நக்கிக் குடித்துவிட்டு, தட்டை, கழுவினதுபோல் சுத்தமாக்கிவிட்டது.

நாரைக்கோ மூக்கு நீளம்; பரவலாக ஊற்றிக் கிடந்த பாயாசத்தை நாரையினால் பருக முடியவில்லை. ஏமாற்றமடைந்தது. நரியினால், தான் ஏமாற்றப்பட்டதை எண்ணி வெட்கமும், துக்கமும் நாரை கொண்டது.

நாரை வெட்கப்பட்டதையும், வேதனைப்பட்டதையும் கண்ட நரி, தனது இயல்புப்படி உள்ளூர மகிழ்ந்தது; வெற்றிக் களிப்பில் மூழ்கி, வெளிப்படையாக நாரையைக் கிண்டல் செய்யவும் முனைந்துவிட்டது.

ஒரு நாள் நாரை, நரியைச் சந்தித்து, தனது வீட்டிற்கு விருந்துக்கு வருமாறு அழைத்தது. அழைப்பை, நரியும் ஏற்றுக்கொண்டது. தனக்குத் தெரிந்த தந்திரம், நாரைக்குத் தெரியாதென்பது நரியின் இறுமாப்பு!

குறிப்பிட்ட நாளில் நரியும், நாரையின் வீட்டிற்கு விருந்துண்ண வந்தது. இரண்டு ஜாடிகளில் பாயாசத்தை ஊற்றி வைத்துவிட்டு, பருகுமாறு நரியிடம் கூறிவிட்டு, கொக்கு ஜாடிக்குள் தனது மூக்கை நுழைத்து, மிக எளிதாகப் பாயாசத்தைப் பருகத் தொடங்கிற்று.

நரியின் வாய் ஜாடிக்குள் நுழைவதாக இல்லை; நாரை பருகுவதைப் பார்த்து, நரியின் முகத்தில் துக்கமும், சோகமும் தோன்றிவிட்டது. தனக்கு விருந்திட்ட நாரையின் விடையை எதிர்பார்க்காமல்கூட, வெட்கத்தோடு தன்னிடத்திற்குத் திரும்பிற்று, நரி!

இந்த நரி - நாரை விருந்திட்டக் கதையைப் போலத்தான் இருக்கிறது, ஆச்சாரியார் நிலையும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் நிலையும்!

காங்கிரஸ் மேலிடத்தின் கட்டளைப்படிதான், ஆச்சாரியார் சென்னை சட்டசபைக்குள் முறையில்லா முறையில் நுழைக்கப்பட்டார்; காங்கிரஸ் சர்க்காரிலும் திணிக்கப்பட்டார்.

ஆசை காட்டியோ, அச்சமூட்டியோ எதிர்க் கட்சியில் பிளவை உண்டாக்கி, காங்கிரஸ் ஆட்சியைப் பெரும்பான்மையாக உருவாக்குவார் என்ற நம்பிக்கையில்தான், ஆச்சாரியாரை, அன்று காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் தங்கள் கூட்டத்தில் சேர்த்துக்கொண்டார்கள். தமக்களிக்கப்பட்ட அரிய வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொண்டு, சொந்தக் கட்சியினரிடம் பரிவாக நடந்துகொண்டு, அவர்களுடைய அன்பைப் பெற ஆச்சாரியார் முயன்றிருக்க வேண்டும். ஆனால் ஆச்சாரியாரின் இயல்பு அதற்கு இடம் கொடுக்கவில்லை என்றும்போல் நாரைக்கு விருந்திட்ட நரிபோலவே ஆச்சாரியார், யதேச்சாதிகாரமாக, கூட்டுத் தோழர்களை அலட்சியப்படுத்தியும், அவமானப்படுத்தியும் நடந்துகொண்டுவந்தார். எனவே கூட்டுத் தோழர்களும், ஆச்சாரியாரிடம் அந்தரங்கசுத்தியான பாசமும், பற்றும் கொள்ளுவதற்குப் பதில், பகையை உள்ளூரப் பெருக்கிக்கொண்டே வந்தார்கள். ஆச்சாரியாரைத் தொலைத்துக்கட்ட சந்தர்ப்பத்தை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

ஆந்திர மாநிலம் உருவானதும், ஆச்சாரியாரின் தேவையின் அவசியமும் மறைந்துவிட்டது. இந்த உண்மையை ஆச்சாரியாரும் நன்கு அறிவார்—கூட்டுத் தோழர்களுக்கும் இது தெரியும்.

அதிகார மோகம் இல்லாதவராக ஆச்சாரியார் இருந்திருப்பாரானால், காங்கிரஸ் வளர்ச்சியில் அக்கறையும் இருந்திருக்குமானால், நெருக்கடி நிலை நீங்கியதும் அவர் கண்ணியமாகப் பதவியைத் துறந்து இருக்க வேண்டும். ஆனால், அவருக்கு இருந்த அதிகார மோகம், அந்த அதிகாரத்தைக் கொண்டு சொந்த ஜாதியினரை செல்வாக்கான பெரும் பதவிகளில் கூடுமானவரை அமர்த்திவிட வேண்டும் என்ற சுயஜாதி வெறி, ஆச்சாரியாரைப் பதவியை விடக்கூடாது என்று கட்டளையிட்டது! ஆச்சாரியாரும் பதவியைத் துறக்க மறுத்தார்!

கட்சி கட்ட ஆரம்பித்தார், சுய ஜாதிப் பத்திரிகைகளின் துணை, அவருக்கு இயல்பாக இருக்கும் தலை கனத்தை மேலும் பளுவாக்கத் துணை நின்றது.

காங்கிரஸ் மேலிடம் தமது உள்ளங் கைக்குள் அடக்கம் என்ற அகந்தையில், தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவரை டெல்லிக்கு அழைத்துச் சென்று மூக்கறுபடச் செய்தார். நரி விருந்து அங்கும் நடைபெற்றது. ஆச்சாரியாருக்கு இரட்டிப்பு சந்தோஷம் உண்டாயிற்று. இந்த சந்தோஷத்தை தனது எடுபிடிகளுடன் ஒக்க இருந்து அனுபவிக்க அவசர அவசரமாக இரண்டே நாளில் சென்னை திரும்பினார். அறிக்கையும் வெளியிட்டார். அதே பழைய கோய்தான். தம்மை எதிர்க்கும் சொந்தக் கட்சியினருக்கு வசை மாலை சாற்றினார். டெல்லி நரி விருந்தில் வேதனைப்பட்டு வீடு திரும்பிய தமிழ் நாட்டுத் தலைவர், இங்கு விருந்து வைத்தார்; ஆச்சாரியாரும் அந்த விருந்தில் கலந்துகொண்டார்.

'ஜில்லா போர்டு தேர்தலை உடனடியாக நடத்துக.'

'வட்ட அதிகாரக் குழுக்களை நியமிக்கக் கூடாது.'

'சட்டசபை கட்சி உறுப்பினர்களை அவதூறாகத் தூற்றியதற்கு சமாதானம் கூறவேண்டும்.'

'புதிய தொடக்கக் கல்வித் திட்டத்தைக் கைவிடவேண்டும்'

இந்த நான்கு பிரச்னைகளில் முதல் இரண்டும் கட்டளையாகிவிட்டன.

இப்படி, நாரை விருந்துபசாரம், ஆச்சாரியாருக்கு அளிக்கப்பட்டது. ஆச்சாரியார் திக்குமுக்காடித் திணறிப்போனார்.

குருநாதர் கதையே ஆடிக்காற்றில் பறக்கும் அம்மிக் குழவியாகும்போது, திருமங்கலத்தாரும், கோவையாரும் கிராமக் கல்யாணத்தாரும், ஊறுகாயரும் இலவம் பஞ்சு கதியைத்தானே பெறுவார்கள்!

ஆச்சாரியார் எதிர்ப்பாளர்களான காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் மேற்குறித்த இரண்டு கட்டளைகளை இட்டதின் மூலம், ஏதோ, மேலிடம் தங்களுக்குச் செய்த அவமானத்தைத் துடைத்துக்கொண்டதாகச் சந்தோஷப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை! ஏதோ, காங்கிரசிலும் ஜனநாயகக் கோட்பாட்டிற்கு இடமிருக்கிறது, என்று, நாட்டு மக்களை கருதுவார்கள் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு, இதனால் ஏற்படலாம்! ஆனால், இந்தக் கட்டளைகளைப் பிறப்பித்துவிட்டதினாலேயே டெல்லியில் தமிழ் நாட்டுத் தலைவருக்குத் தரப்பட்ட, நரி விருந்தை, நாட்டு மக்கள் மறந்துவிடமாட்டார்கள் என்பது நிச்சயத்திலும், நிச்சயமாகும். நிற்க,

புதிய கல்வித் திட்டத்தை நிறுத்தி வைக்குமாறு ஆச்சாரியாருக்குச் சட்டசபை கட்டளைப் பிறப்பித்தது. அதற்குக் கீழ்ப்படிந்து நடக்க அவர் கடமைப்பட்டு இருக்கிறார். ஆனால் ஆச்சாரியாரோ, கட்டளையை நிறைவேற்றாமல், அது 'வெறும் சிபாரிசு' என்று கூறிவிட்டார்.

அதைப் போலவே, காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் இட்டுள்ள கட்டளைகளையும், நாளையே, 'வெறும் சிபாரிசு' என்று ஆச்சாரியார் கூறத் துணிந்தாலும் துணியக்கூடும். அந்த மாதிரி ஒரு நிலை பிறக்காது என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது?

அப்படி ஆச்சாரியார் மறுத்து, தம் மனம்போல நடக்க முனைவாரானால், அவரைத் தடுத்து நிறுத்துவதற்கான அதிகாரம் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களிடம் இருந்தபோதிலும், அதை உபயோகிப்பதா கூடாதா என்பதற்கான அனுமதியைப் பெற, மீண்டும் டெல்லிக்குத்தானே காவடி தூக்க வேண்டும்? அப்பொழுதும், இப்பொழுது தரப்பட்டது போலவே நரி விருந்து தரப்பட மாட்டாது என்று உறுதியாகக் கூறுவதற்கு காங்கிரஸ் வரலாற்றில் இடங்கிடையாது. மறுபடியும் ஒருமுறை நரி விருந்து நடைபெறக்கூடும் என்றே நம்பலாம்.

காசி யாத்திரை போய்த்தான் ஆகவேண்டும் என்ற ஏற்பாடும், அதில் அசைக்க முடியாத நம்பிக்கையும் உள்ளவரையில், தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவருக்கு டெல்லி மேலிடம் நரி விருந்து கொடுத்துக்கொண்டுதான் இருக்கும். அந்தப் போக்கை, மேலிடம் என்றும் மாற்றிக் கொள்ளப்போவது கிடையாது.

இந்த போஜிகார ஏற்பாட்டில் ஆச்சாரியாருக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிற வரையில், இப்பொழுது கூட்டுத் தோழர்கள் பிறப்பித்துள்ள இரு உத்தரவுகளையும், 'வெறும் சிபாரிசு' என்று அவர் கூற முன்வந்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரசாங்க அதிகாரிகளின் சொத்துக்கள்

ஆண்டுக்கொரு முறை பரிசீலிக்க உத்தேசம்

புதுடெல்லி, டிச. 16—

சர்க்கார் அதிகாரிகள் தங்கள் வசமுள்ள சொத்துக்கள் பற்றி கட்டாயமாக ஆண்டுக்கொரு முறை தெரியப்படுத்தவேண்டுமென்றும், சொத்துக்கள் வாங்குவதானால் சர்க்காரிடம் முன்கூட்டி அனுமதிபெற வேண்டுமென்றும் விதிகள் ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்செய்தியை, உள்நாட்டு இலாகா உதவி மந்திரி ராஜாங்க சபையில் தெரிவித்தார்.

மலைகளையும் துளைத்துச் செல்லும் நில மூழ்கிகள்!

சோவியத் நாட்டின் புதிய போர் சாதனம்!

பாரிஸ், டிச. 17—

சோவியத் ரஷ்யாவில், புதிதாக ஒரு போர்க்கருவி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடலுக்குள் மூழ்கிச் சென்று, திடீரென்று நீர் மட்டத்தில் தோன்றி, எதிரி கப்பல்களைத் தாக்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைப் போன்றே, இந்தப் புதிய 'நில மூழ்கிகள்' பூமிக்கடியிலேயே குடைந்து கொண்டு சென்று, எதிர்பாரா வகையில் தரைக்கு மேல் கிளம்பித் தாக்கும் அற்புத சாதனமாகும்.

இதை முதல் முதலாக ரஷ்யாவில் உள்ள யூரல் மலைத் தொடரில் உள்ள 'பாலகோடாட்' குன்றைத் துளைப்பதில் சோதனை நடத்தப்பட்டது.

இந்த விசித்திரமான நில மூழ்கியின் மூக்கு முனையில் வலுமையான 'ஆக்கர்' ஒன்று இணைக்கப்பட்டு உள்ளதாம். இதன் பலனாக, தரை பாதுகாப்பு அரண்கள் இனிதவிடுபொடியாகிவிடும் என்றும், அணுகுண்டு எதிர்ப்புப் பாதுகாப்பு ஏற்பாடும் சிதைந்துவிடக் கூடும் என்றும், பூமிக்கடியில் கொரில்லாப் போர் நடத்துவது நடைமுறைக்கு வரக்கூடுமென்றும், நம்பப்படுகிறது.

[நேற்று இது பற்றின செய்தியில் 'நில மூழ்கி' என்பதற்குப் பதில் 'நீர் மூழ்கி' என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருத்திப்படித்துக்கொள்ளவும்.]

சென்னைக்கு அரிசி விற்க ஆந்திராவின் அறிவிப்பு!

— (:) —

ஏற்றுமதிக்கு நான்கு லட்சம் டன் எதிர்பார்க்கப்படுகிறது!

கர்னூல், டிச. 17—

ஆந்திர மாநில மக்களுக்குச் செலவானது போக, ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் 4 லட்சம் டன் அரிசி உபரியாகக் கிடைக்கும் என்று ஆந்திர சர்க்கார் எதிர்பார்க்கிறது.

இந்த அதிகப்படியான அரிசியில், சென்னை, திருவாங்கூர், யூனியன் சர்க்கார் ஒவ்வொன்றுக்கும் ஒரு லட்சம் டன் அரிசி வீதம் விற்க விரும்புவதாக ஆந்திர சர்க்கார் அறிவித்துள்ளது. மீதமுள்ள ஒரு லட்சம் டன் அரிசியை தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் சென்னையில் விற்பனைக்கு ஏற்பாடு செய்ய ஆந்திரம் கருதியுள்ளது எனத் தெரிய வருகிறது.

லண்டனுக்கும்—கேப்டவுனுக்கும்

$12\frac{1}{2}$ மணி நேர விமானப் பிரயாண வெற்றி!

போக வர 6000 மைல் உள்ளன

கேப்டவுன், டிச. 17—

லண்டன் நகருக்கும் கேப்டவுனுக்கும் ஆகாய மூலம் 3000 மைல் தொலைவு உள்ளது. லண்டனிலிருந்து இரவு சரியாக 12 மணி 1 நிமிஷத்திற்குப் புறப்பட்ட விமானம் கேப் டவுன் போய் சேர்ந்து உடனே லண்டன் நகருக்குத் திரும்பியது. இந்தப் பிரயாணம் 12 மணி 25 நிமிஷத்தில் முடிந்திருக்கிறது.

ஏற்கனவே இந்த பிரயாணம் 21 மணி நேரம் $3\frac{1}{2}$ நிமிஷம் பிடித்தது.

பிரிட்டிஷ் ஆகாயப் படையைச் சார்ந்த விமானம் இந்தப் புதிய வெற்றியைப் பெற்று இருக்கிறது.

காந்தியார் ஞாபகார்த்த சமாதானப் பரிசு!

புதுடெல்லி, டிச. 18—

சமாதானத்திற்காக உழைப்பவர்களுக்கு நோபல் பரிசு அளிப்பது போல், காந்தியின் ஞாபகார்த்த சமாதான பரிசு ஒன்று உலக ஜனநாயகக் காங்கிரசில் ஏற்படுத்தப்படவிருக்கிறது.

புது டில்லியில் கூடவிருக்கும் இந்தக் காங்கிரசின் முதல் செஷனில் இது பற்றிய தீர்மானம் கொண்டுவரப்படவிருக்கிறது.

இம் மாநாட்டிற்கு பிரபல நடிகர் பிருத்விராஜ் கபூர் தலைமை வகிக்கிறார். மக்கள் சபை உதவி சபாநாயகர் இம் மாநாட்டை ஆரம்பித்து வைக்கிறார்.

கல்லக்குடி அறப்போர் வழக்கு

பிராசிகியூஷன் சாட்சிகள் மீண்டும் குறுக்கு விசாரணை

திருச்சி, டிச. 15—

திருச்சி அடிஷனல் சப்-மாஜிஸ்திரேட் திரு கே. பி. ராதாகிருஷ்ணன் முன்பு கல்லக்குடி அறப்போர் வழக்கு மேலும் விசாரணைக்கு வந்தபோது, பிராசிகியூஷன் சாட்சி 1 லிருந்து 4 முடிய, எதிர்தரப்பு வழக்கறிஞர் திரு சந்திரசேகர உடையாரால் மீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர்.

மேற்படி வழக்கில் தோழர்கள் கண்ணதாசன் தர்மலிங்கம் தம்புசாமி, ஐ. மு. ஷரீப், ராதாகிருஷ்ணன், ராமதாஸ் உள்ளிட்ட 24 தோழர்கள் மீது, கல்லக்குடியில் சென்ற ஜுலை மாதம் 15-ந் தேதியன்று கலகம் விளைவித்ததாகவும், ரயிலை நிறுத்தி தடங்கல் விளைவித்ததாகவும் திருச்சி குற்ற இலாகா இன்ஸ்பெக்டரால் குற்றஞ் சாட்டப்பட்டது.

வழக்கு ஆரம்பிக்கும் முன் ரிமாண்டு செய்யப்பட்ட 2 5, 9, 10 13, 15, 22 ஆகிய 7 தோழர்களையும், போலீசார் கையில் விலங்கு போட்டு கொண்டு வந்தனர். தோழர்கள் மாஜிஸ்திரேட்டிடம் தங்களை வேண்டுமென்றே அவமானப் படுத்துவதற்காக போலீசார் சிறைக்கு வெளியே விலங்கிட்டனர் என்று புகார் செய்தனர். மாஜிஸ்திரேட் விலங்குகளை அகற்றும்படி உத்திரவிட்டார். போலீசார், தாங்கள் விலங்கை எடுப்பதாகக் கூறியும், கைதிகள் மறுத்ததாகக் கூறினர்.

உடனே வழக்கறிஞர் சந்திரசேகர உடையார், எதிரிகளை சிறையிலிருந்தே விலங்குகளை கழற்றி அழைத்து வந்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறில்லாமல், வேண்டுமென்றே சிறை வாசலில் எல்லோருக்கும் முன்னிலையில் அவமானப் படுத்தும் எண்ணத்துடன் கையில விலங்கிட்டதைத்தான் ஆட்சேபிக்கின்றனர் என்றும் கூறினர்.

குறுக்கு விசாரணை

மறுமுறை குறுக்கு விசாரணையின்போது பிராசிகியூஷன் தரப்பு முதல் சாட்சியும், அப்போது அரியலூரில் சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட்டாக இருந்தவரும், சுட உத்திரவிட்டவருமான ஆர் பசுபதி கூறியதாவது:—

"நான், எதிரிகளை அடையாளம் காட்டும்படி எப்போதும் கேட்டுக் கொள்ளப்படவில்லை; எதிரிகளில் சிலர் என் கோர்ட்டு முன் குற்றஞ் சாட்டப்பட்டிருக்தனர்; அவர்களை எனக்கு அப்போது பார்க்கச் சந்தர்ப்பம் இருந்தது; அதற்குப் பிறகு எதிரிகளில் சிலரைப் பார்த்திருக்கிறேன்; 1, 6, 7, 10, 16, 17 18 ஆகிய எதிரிகளில் சிலரை ஒரு தடவையும், மற்றும் சிலரை பல தடவையும், அரியலூர் கோர்ட்டில் பார்த்துள்ளேன்; நான் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்த அதிகாரி இன்ஸ்பெக்டர் முன் எதிரிகளின் பெயர்களையோ அவர்களுடைய அங்க அடையாளங்களையோ கூறவில்லை; தடியடிப் பிரயோகத்தினால் கலகக்காரர்கள் விலகாததாலும், கல் வீச்சு அதிகரித்ததாலும் நான் சுட உத்திரவிட்டேன்; கல்லெறிந்தவர்கள் யாரென்று எனக்குத் தெரியாது; அது என் வேலையும் அல்ல; நிலைமையை அறிந்து அமைதியைக் காப்பதுதான் கடமை; கும்பல் சிறிது கலைவதாக சூசகங்கள் ஏற்பட்டவுடனேயே, சுடுவதை நிறுத்தும்படி உத்தரவு அளிக்கப்பட்டது. நான், 17-வது எதிரி ராதாகிருஷ்ணன் கல்லெறிவதையும், மற்றவர்களைத் தூண்டிவிட்டதையும், கோஷங்கள் கிளப்பியதையும் பார்த்தேன்."

பிராசிகியூஷன் 2-வது சாட்சி முசிறி போலீஸ் டிபுடி சூப்பரேண்டெண்டு பத்மநாப அய்யர் மறுமுறை குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது அவர் கூறியதாவது:—

"எதிரிகளை அடையாளம் கண்டுபிடிக்கும்படி என்னை ஒருவரும் கேட்கவில்லை; வழக்கை விசாரித்த இன்ஸ்பெக்டர் முன்பு எதிரிகளின் பெயர்களைக் கூறவில்லை; எதிரிகளில் சிலரை, அவர்கள் கைது செய்யப்பட்ட பிறகு சில தடவை பார்த்திருக்கிறேன்; எதிரிகள் 1, 2, 3, 11, 14, 17 ஆகியோரை நான் பார்த்திருப்பேன்; எதிரிகள் 1, 2, 3, 11, 14, 17 ஆகியோரை நான் பார்த்திருப்பேன்; ஆனால் இப்போது நினைவில்லை; தடியடிப் பிரயோகத்தின்போது சிலர் ஓடினர்; கூட்ஸ் வண்டிக்குப் பின்னால் ஒளிந்து கொண்டனர்; எவ்வளவு நேரம் அங்கே இருந்தனர், பிறகு, எங்கே, எப்படிச் சென்றனர் என்பது எனக்குத் தெரியாது; சம்பவம் முழுமையுமே, கல்வீச்சு, தடியடி, துப்பாக்கிப் பிரயோகங்கள் எல்லாம் 10 நிமிட நேரத்திலேயே நடந்திருக்கிறது; வழக்கு விசாரணை அதிகாரி, இன்ஸ்பெக்டர் முன் எதிரிகள் 1லிருந்து 4-முடிய, 11, 14, 17, 22, 23, 24 இவர்களின் பெயர்களையோ, அடையாளங்களையோ கூறவில்லை வழக்கை விசாரித்த இன்ஸ்பெக்டர் முன் 23-வது எதிரி மற்றவர்களை கல் வீசும்படி சொன்னாரா என்று, நான் சொன்னேனா இல்லையா என்று எனக்கு இப்போது ஞாபகமில்லை.

அடுத்த சாட்சி லால்குடி சப்-இன்ஸ்பெக்டர் முத்து வெங்கட்ராமன் கூறியதாவது:-

"எதிரிகளில் அநேகரை எனக்கு முன்னமேயே தெரியும்; வழக்கு சம்பந்தமாக விசாரித்த அதிகாரி முன் நான் 18, 23, 21, 15 ஆகிய எதிரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டேன்; கலவரத்தில் பங்கெடுத்துக் கொண்டதாக நான் பார்த்த சிலரை அடையாளம் காட்ட முடியும்; 18-வது எதிரி, அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட விசாரணைக் கமிட்டி முன் டால்மியாபுரத்தில் சாட்சியம் கூறினாரா என்று எனக்குத் தெரியாது."

அடுத்தபடி டால்மியாபுரம் போலீஸ் ஹெட் கான்ஸ்டேபிள் வெங்கடராமன் கூறியதாவது:—

"எதிரிகளில் சிலரை நான் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டியிருக்கிறேன்; வழக்கு விசாரணை நடத்திய இன்ஸ்பெக்டர் முன் நான் 1, 2, 3, 4 9 11, 12 13, 15, 17, 22, 23, 24 ஆகிய எதிரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டேன்; 15, 17 ஆகிய எதிரிகளையும், மற்ற எல்லோரையும் இச்சம்பவத்திற்குப் பிறகுதான் தெரியும்; நான் அன்றிரவோ, அடுத்த தினங்களிலோ திருச்சி ஹெட்குவார்ட்டர் ஆஸ்பத்திரிக்குக் காயமடைந்தவர்களுடன் வரவில்லை; திருச்சிக்கே வரவில்லை."

பிராசிகியூஷன் தரப்பு 5-வது சாட்சி கான்ஸ்டேபிள் ராமசாமியை, மறுமுறை குறுக்கு விசாரணை செய்யத்தேவையில்லை என்று எதிர் தரப்பு வக்கில் கூறிவிட்டார்.

அடுத்தபடி டால்மியாபுரம் போலீஸ் ஹெட் கான்ஸ்டேபிள் வெங்கட்ராமன் கூறியதாவது:-

தேசிய விழாக்களுக்கு செலவழிக்கப்பட்ட தொகை

புதுடில்லி, டிச. 18—

மூன்று தேசிய விழாக்கள்—சுதந்திர தினம், குடியரசு தினம், மகாத்மா பிறந்த தினம் ஆகிய விழாக்களுக்காக, மத்திய சர்க்கார் 1953-ம் ஆண்டில் செலவழித்துள்ள தொகை பற்றி, மக்கள் சபையில் விவரம் தரப்பட்டது:—

குடியரசு தினம்: ரூ 1,65,811—14—8.

சுதந்திர தினம்: ரூ 12,096—15—0

மகாத்மா பிறந்த தினம்: ரூ 300—0—0

கோதுமை கொள்முதலில் கோடிக்கணக்கில் நஷ்டம்

யூனியன் சர்க்காரின் பொருளியல் அறிவுக்கு எடுத்துக்காட்டு!

புதுடெல்லி, டிச 16—

இந்திய அரசாங்கம், அமெரிக்காவிடம் கோதுமையை கடனாகப் பெற்றதில் ஏற்பட்ட நஷ்டம் ரூ 16 99 கோடி என்று, நேற்று மக்கள் சபையில் முடிவாக அறிவிக்கப்பட்டது. இந்த நஷ்டம், கடனாகப் பெற்ற கோதுமையின் விலைவாசிகளில் ஏற்பட்ட மாற்றத்தாலும், இறக்குமதிச் செலவு, இதரச் செலவுகளாலும் ஏற்பட்டதாம்.

இந்த நஷ்டத்தை சில தவணைகளில் ஈடு கட்டுவதற்காக, ரெவின்யூ வருமானத்திலிருந்து ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகை மான்யமாகப் பெற, மக்கள் சபையில் அனுமதி கோரப்பட்டுள்ளது.

'தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் பெறுக'

புகலூர் பஞ்சாயத்து போர்டில் தீர்மானம்

புகலூர், டிச 15—

12—12—53-ந் தேதி வேலாயுதம் பாளையத்தில் நடைபெற்ற புஞ்சைப் புகலூர் பஞ்சாயத்து போர்டு கூட்டத்தில், தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் பெற வேண்டுமாறு அரசியலாரைக் கேட்டுக்கொள்ளும் ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் சென்னை அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு விட்டதாகத் தெரிய வருகிறது.

★

தூத்துக்குடி, சதிவழக்கை வாபஸ் பெறக் கோரி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ள தி மு. கழகங்கள் :-

- தோட்டம்பாளையம்
- திருச்சுளி
- திருப்பரங்குன்றம்
- மருதன் வாழ்வு
- சின்னாளப்பட்டி

ஆவடி தி. மு. கழகம்

6—12—53ல், உறுப்பினர் கூட்டம் கூடியது. அதுபோது, ரயில் நிறுத்தப் போரில் சிறை சென்று மீண்ட தோழர்களுக்கு நடத்திய வரவேற்புக் கூட்டத்தின் வரவு—செலவு கணக்கு சரி பார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், நடப்பு ஆண்டுக்கு செயலாளர்: தோழர் கே கோவிந்தசாமி; துணைச் செயலாளர்: அ. ரா. கரிகாலன்; பொருளாளர்: பி கே. எஸ். மைசாரவும்; மாவட்டப் பிரதிநிதிகள்: எம். எஸ். ஏ ஈஸ்வரன், ஐ பி. ஏ. இராமன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் செழியன், ஈஸ்வரன், ராமமூர்த்தி ஆகியோர் பேசினர்.

எண்ணூர் தி. மா. மு. கழகம்

எண்ணூர், டிச. 15—

9—11—53ல், தி. மா. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்கூடியது. அதுபோது, தூத்துக்குடி சதிவழக்கு நிதியைப் பற்றியும், வரவு—செலவு கணக்குகளை சரி பார்த்தும், 23—12—53 புதனன்று கழகத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை படத்தைத் திறப்பதற்கும், கழகக் கொடியை ஏற்றுவது பற்றியும் முடிவுகள் செய்யப்பட்டன.

காங்கேயம் தி. மு. கழகம்

10—12—53ல், நகர தி. மு கழக செயற்குழு கூட்டம் தோழர் எம். வேலுசாமி தலைமையில் நடைபெற்றது. அதசமயம், கழக வளர்ச்சி நிதி திரட்டுவதெனவும், கழகத்தின் சார்பாக ஓர் படிப்பகம் துவக்குவதெனவும், ஜனவரியில், தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, எம் எஸ். ஏ. சம்பத், நெடுஞ்செழியன் முதலியோரை அழைத்து ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

உண்டியல் விவகாரம்!

சென்னை, டிச. 17—

விழுப்புரம், ஜில்லா முன்சீப் கோர்ட் ஹாலிலும், தலைமைக் குமாஸ்தா மேஜையிலும் உண்டியல்கள் 1953 செப் 24ந் தேதி வைக்கப்பட்டிருந்தது உண்மைதானென்று சட்டமந்திரி கோர்ட சட்ட சபையில் ஒப்புக் கொண்டார்.

இப்பழக்கம் கைவிடப்பட்டதாகவும், நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையென்றும் சொன்னார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், "இந்த உண்டியலுக்கும், திருப்பதி உண்டியலுக்கும் சம்மந்தமுண்டா?" என்று கேட்டார். (சிரிப்பு)

மந்திரி: "தனியாகக் கேளுங்கள் விசாரித்துச்சொல்கிறேன்."

சம்பள உயர்வு!

லண்டன், டிச. 19—

போர்டு மோட்டார் கம்பெனி, தன் தொழிலாளர்களுக்காக அளித்த சம்பள உயர்வு காரணமாக ஆண்டில், 5,00,000 டவுன் அதிகப்படி செலவாகிறதாம்!

தஞ்சையில் நிதி அளிப்புக் கூட்டம்

தஞ்சை, டிச. 16—

6—12—53ல், தூத்துக்குடி சதிவழக்கு நிதி அளிப்புக் கூட்டம், திலகர் திடலில் தோழர் எ. வி. பதி தலைமையில் நடைபெற்றது. முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்தனர்; அதுபோது, தோழர்கள் என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம், ஏ. கோவிந்தசாமி எம் எல் ஏ, மு. கருணாநிதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில், தஞ்சை நகரத்தின சார்பில் தூத்துக்குடி சதி வழக்குக்காக வசூல் செய்த தொகை ரூ 500-ஐ தோழர் ஏ கோவிந்தசாமி எம். எல். ஏ, அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. முனிசிபல் அங்கத்தினர்களால் தூத்துக்குடிசதிவழக்கை வாபஸ் வாங்க வேண்டி, முதல் அமைச்சருக்கு எழுதப்பட்ட கடிதங்களும் ஒப்படைக்கப்பட்டதோடு, தஞ்சை பொது மக்களால் எழுதப்பட்ட மகஜர்களும் தரப்பட்டது.

பொதுக் கூட்டத்தில் சதி வழக்கு நிதிக்காக உண்டியல் வசூல் ரூ 68 கிடைத்தது.

முத்தமிழ் மன்றம்

சென்னை, டிச. 15—

சென்னை முத்தியால்பேட்டை சாலை விநாயகர் கோவில் தெரு 17-ம் எண்ணுள்ள கட்டிடத்தில், 15—12—53 இரவு இம்மன்றச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது அதுபோது, மன்றத் திறப்பு விழாவை ஜனவரித் திங்கள் முதல் வாரத்தில் நடத்துவதென்றும், விழாவிற்கு தோழர்கள் நெடுஞ்செழியன், க. அன்பழகன் ஆகியோர்களை அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. கழகத்திற்காக இதுவரை வசூலான ரூ 51-8-0-ம் தோழர் வி. இராதாமணாளனிடம் ஒப்படைக்கப்பட்டது என, செயலாளர் தோழர் மே. நடராசன் அறிவிக்கிறார்.

இழிநிலை திரைப்படங்கள் கைப்பற்றப்பட்டன

தனி நபர் மனோவிகாரத்திற்குக் கிடைத்த பரிசு!

பம்பாய், டிச. 16—

பம்பாய் போலீசார், ஒரு திரைப்படம் காட்டும் கருவியையும், வெண் திரையையும், 24 சுருள் இழிநிலை திரைப்படத்தையும், கைப்பற்றினர். தனி நபர் ஒருவர், தமது மனத்திருப்திக்கு அப்படங்களைத் தனது வீட்டில் திரையிட்டு கண்டு களித்துக் கொண்டு இருந்தார்.

அந்த 24 சுருள்களில் 11 சுருள்கள் பார்க்கத் தகுதியற்றவை என்று சொல்லப்படுகிறது.

அவரும் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டுள்ளார்.

தடை செய்யப்பட்ட நூல்களும் பத்திரிகையும் பறிமுதல்

சென்னை, டிச. 17—

சென்னை நகர துப்பறியும் போலீஸ் துறையினர், நகரில் குறிப்பிட்ட சில புத்தகக் கடைகளில் அமைந்து, அருவெறுக்கத் தகுந்ததாக உள்ள சில நூல்களையும், பத்திரிகைகளையும் கைப்பற்றியுள்ளதாகத் தெரிகிறது. சர்க்காரால் தடை விதிக்கப்பட்டுள்ள பிரசுரங்களும் அதில் அடங்கியுள்ளனவாம்.

பதிவு செய்துள்ள இலங்கைவாழ் குடிகள் எண்ணிக்கை!

கொழும்பு, டிச. 19—

இலங்கை வாழ் குடி மக்களாக இது வரை பதிவு செய்து கொண்ட இந்தியர்-பாகிஸ்தானிகளின் எண்ணிக்கை 25,631 ஆகும். இதுவரை 7,475 மனுக்கள் டைசல் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு தினத்திற்கு 40 மனுக்கள் பைசல் செய்யப்படுகிறதாம்.

சென்னையில் தலைவர்கட்குத் தாய்மார்கள் வரவேற்பு

★

சென்னை, மெமோரியல் மண்டபத்தில், 20-12-53 ஞாயிறு காலை 8 மணிக்கு, சிறை சென்று மீண்ட தலைவர்கள்: பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள்: இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோருக்கு திராவிடத் தாய்மார்கள் சார்பில் வரவேற்பும்—தூத்துக்குடி நிதி அளிப்பும் நடைபெறும் என்று, கன்வீனர் சத்தியவாணிமுத்து அம்மையார் அறிவிக்கிறார்.

நன்கொடை: ரூ. 1, அணா. 8.

நிபுணர் குழுத் தலைவரின் முன்னாள் வரலாறு!

—[o]—

இனம் இனத்தோடு என்றாயிற்று!

ராஜாஜியின் கல்வித் திட்டத்தை விசாரிக்க ஒரு கமிட்டி போடப் பட்டதல்லவா? இக்கமிட்டிக்கு தலைவர் திரு. ஆர். வி. பாருலேகர். இவர் யாரென சில விவரங்களைக் கூறுகிறோம். பிறகு இவர்தான் திட்டத்தைப் பாராட்டியிருக்கிறார் என்ற செய்தியை நீங்கள் சரிவரப் புரியலாம்.

திரு. பாருலேகர் "அரை நாள் படிப்பு போதும்" என்ற கொள்கையை கிளர்ச்சியாக பலஆண்டுகள் நடத்தி வருகிறவர். இது சம்பந்தமாக அவர் "Half-a-day Off!" என ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார். இந்தப் புத்தகம் பம்பாயில் பிரசுரமாயிருக்கிறது. அதில் பிள்ளைகள் அரைநாள் படித்தாலே போதும் என்பது இவரது வாதம்.

இந்த நிலைமை வாதிதான் ஆச்சாரியாரின் அரை நாள் படிப்பு — அரை நாள் ஆடுமாடு மேய்க்கிற திட்டத்தை விசாரிக்க வந்தது.

ஆகவே, இனி மற்றவற்றை நீங்களே புரிந்து கொள்ளலாம்.

இப்புத்தகம் வேண்டுவோர் பம்பாயிலுள்ள எந்தப் புத்தகக் கடைக்கு எழுதினாலும் வாங்கலாம். ஏனென்றால் கட்டுக் கட்டாக லைப்ரரியின் ஜீரணத்துக்காக அங்கு கட்டி வைத்திருக்கிறார்கள். சிரிக்காதீர்கள்! உண்மைதான்!

—பெரியகை, 21-12 53.

நன்றி

☆

"என் அருந் தங்கை ஞானம்பாள்-பஞ்சநாதம் திருமணம் தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில் நடந்தேறியது. தலைவர் மேடையேறி தோர் சொற்பொழிவாற்றி மண விழாவை நடத்தி வைத்தார். மணமக்களைப் பாராட்டி தோழர்கள் ஜி. பாலகுருசாமி, அறவழி அழகமுத்து, என். நேசமணி, எல். வி. லிங்கம் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர். மணமக்களை வாழ்த்தி தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், சி. டி. டி. அரசு, க. அன்பழகன், சேலம் சித்தையன், கோவை ஜி. டி. நாயுடு, என். வி. நடராசன், கே. கே. நீலமேகம், முல்லை கொம்மை, எம். பி. வடிவேல், சததி அம்பைகாம், ஆர் ராஜு பி.ஏ., செல்லையா, மாடசாமி ஆகியோர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார்," என்று தோழர் வாமனமலை அறிவிக்கிறார்.

தமிழ், ஆட்சி மொழி ஆவது நல்லதுதான்!

ஆனால் பல மொழியினர் உள்ளதை மறக்கக்கூடாது

சர். பி. டி. ராஜன் பேச்சு

சென்னை, டிச. 17—

புதுப்பேட்டை, ஹாரிஸ் ரோடில் தேசிய உருவப்படசாலையில் ஏ. ஓ. ஹியூமன் உருவப் படத்தை, தோழர் பி. டி ராஜன் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வாலிபர்கள் வெறும் பிரசங்கங்கள் செய்துவிட்டால், அரசியல் வாதியாகி விடலாமென்று நினைக்கிறார்கள்; இப்படி நினைப்பது பெருந் தவறு; வெறும் பேச்சுக்கள், சொற்பொழிவுகளால் இலட்சியம் கைகூடி விடாது."

"தேசத்தின் நிர்வாகத்தை ஏற்று நடத்துவதற்கு வாலிபர்களைப் பழக்குவதில் நம்மோருள்ள அரசியல் வாதிகள் முனைய வேண்டும். அதற்குத் தக்கபடி கல்வி முறையை மாற்ற வேண்டும்."

"வாழ்க்கைக்குப் பொருத்தமாகவும், தலைவர்களாக அவர்கள் ஆவதற்குப் பொருத்தமாகவும் கல்வி முறையை மாற்றி அமைக்க வேண்டும்."

"நீதி மன்றங்களிலும், சட்ட சபைகளிலும், தமிழ் மொழியிலேயே பேசவேண்டுமென்ற இயக்கம் நடந்து வருகிறது. அப்படிச் செய்வது நல்லதுதான்; ஆனால் மொழி வாரி குழுக்கள் நம்முடன் இருக்கும்வரை, சட்டசபையில், ஆங்கிலம் தெரிந்தவர்கள் ஆங்கிலத்தில் பேசுவது நல்லதென்று நினைக்கிறேன்."

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

முகமது நபி பிறந்த தின விழா

20—12—53 ஞாயிறு மாலை 6 மணிக்கு, ஹைகோர்ட் கடற்கரையில், எம். கே. எஸ். முகிய்யதீன், பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில், பெரியார் ஈ. வே. ரா., சி. இராஜகோபாலாச்சாரியார், ப. ஜீவானந்தம், எம். முகமத் கனி, எம். ஏ., கே. விநாயகம், அல்ஹாஜ் ஏ. எம். உபயதுல்லா, மீனாம்பாள்-சிவராஜ், நடிகர் எஸ். ஏ. நடராஜன், எஸ். ஏ பி. யூசுப், மந்திரிகள் பழனிச்சாமி கவுண்டர், டாக்டர் யு. கிருஷ்ணாராவ் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கும்பகோணம் ஏ. டி. சுல்தான், நாகூர் ஹனீபா பண் பாடுவர்.

அச்சுத் தொழிலாளர் மாநாடு

சென்னை, டிச. 19—

சென்னை அச்சுத் தொழிலாளர் 10-வது மாநாடு, கோகலே மண்டபத்தில், டிச. 19, 20-ந் தேதிகளில் நடைபெறும். பொதுவுடமைக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர், மாநாட்டில் கலந்துகொள்வர்.

வ. ஆ. மா. கிளைக் கழகத் தோழர்களுக்கு

தூத்துக்குடி வழக்கு நிதிக்கென கிளைக் கழகங்களுக்கு ஒதுக்கியுள்ள கோட்டாவை வசூலித்து, மாவட்டச் செயலாளர் இதற்கென கீழ்க்கண்டவாறு சுற்றுப் பிரயாணம் செய்யும்போது நிதி தருவதுடன், டிச. 27-ந் தேதி வேலூரில் தலைவர்களுக்கு அளிக்கும் வரவேற்பில் கலந்து கொள்ளவேண்டுமென்று மாவட்டச் செயலாளர் ஏ. எல். சி. கிருட்டினசாமி வேண்டுகிறார்.

சுற்றுப்பயண விபரம்:

20—12—53	திருவத்திபுரம், வந்தவாசி.
21—12—53	களம்பூர், சேவூர், திருவண்ணாமலை.
22—12—53	குடியாத்தம் - கவசம்பட்டு
23—12—53	சித்தூர், ஏகாம்பரகுப்பம்.
24—12—53	தக்கோலம், அரக்கோணம்.
25—12—53	வாலாஜா, ஆற்காடு, விசாரம்
26—12—53	பெண்ணாத்தூர், காட்டுப்பாடி, கழிஞ்சூர்.
27—12—53	வேலூரும், சுற்றுப்புறக் கிளைகளும்.

குறள் நெறிக் கழகம்

புரசை, கங்காதீசுவரர் கோவில் தெரு, நகராண்மைக் கழக ஆண் பள்ளியில், 20-12-53 ஞாயிறு காலை 9 மணிக்கு, குறள் வகுப்பு நடைபெறும். புலவர் ஏ. கே. வேலன் அவர்கள் வகுப்பை நடத்துவார்.

'ஐஸ் புரூட்' விற்பவர் சாட்சியம்

திருநெல்வேலி, டிச. 15-

இன்று ஸ்பெஷல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு எஸ். அரிகர அய்யர் முன்பு, தூத்துக்குடி கலவர வழக்கு விசாரணை, மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

32-வது சர்க்கார் தரப்பு சாட்சியாக லட்சுமண பிள்ளை சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:—

"நான் தூத்துக்குடி கனகசபாபதி பிள்ளை தெருவில் வசிக்கிறேன்; கமிஷனுக்கு ஐஸ் புரூட் வாங்கி விற்கிறேன்; சென்ற ஜூலை மாதம் 15-ந் தேதி வழக்கம்போல் கனகசபாபதி பிள்ளை தெரு வழியே விற்பனைக்கு போய்க் கொண்டிருந்தேன்; அப்போது சுமார் 9 மணி; சுமார் நான்கு அல்லது ஐந்து பேர் கொண்ட ஒரு கூட்டம் வருவதைப் பார்த்தேன்; அக் கூட்டத்தில் 56-வது எதிரி தங்கராஜுவும், 86-வது எதிரி முனியாண்டி பகடையும் இருப்பதைப் பார்த்தேன்; இவர்களை எனக்கு முன்பே தெரியும்; அவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டதின் பேரில் அவர்களுக்கு ஐஸ் புரூட் கொடுத்தேன்; அவர்கள் புதுக் கிராமத்திற்குப் போவதாகச் சொன்னார்கள்; அவர்களுக்குக் கொடுத்த ஐஸ் புரூட்டிற்கு, மார்க்கட்டில் தேங்காய்க் கடை வைத்திருக்கும் பொன்னுசாமியிடம் காசு வாங்கிக் கொள்ளும்படி சொன்னார்கள்; பிறகு அவர்கள் மேற்கு நோக்கிச் சென்றனர்; நான் மார்க்கெட்டிற்குப் போனேன்; பொன்னுசாமியைக் காணவில்லை; அங்கிருக்கும் போது, ஊரில் கலவரமாயிருக்கிறதென்று தெரியவந்தது; நான் ஐஸ் புரூட் வண்டியைத் தள்ளிக்கொண்டு சப்டிவிஷன் ஆபீசுக்குப் போனேன்; அங்கு வண்டியை விட்டு, திரு பி வீ. சேக்குப் போவதாகச் சொன்னேன்; அம்பெனிலிருந்தவர்கள், மதியானத்திற்குப் பிறகு போகலாம் என்று என்னிடம் சொன்னார்கள்; இரண்டு தினங்கள் கழிந்து சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்."

திரு. எம். என். செல்லையப்ப பிள்ளையின் குறுக்கு விசாரணையின்போது சாட்சி சொன்னதாவது:—

"எனக்கு கமிஷன் மூலம் தினம் சுமார் இரண்டு அல்லது இரண்டரை ரூபாய் கிடைக்கும்; ஒரு ரூபாய்க்கு ஐந்து அணா கமிஷன் கொடுப்பார்கள்; அன்றையத் தினம் சுமார் மூன்று அல்லது நான்கு ரூபாய்க்கு விற்றேன்; யார் யாருக்கெல்லாம் ஐஸ் புரூட் விற்றேன் என்று நினைவில்லை; தெரிந்தவர்களுக்குக் கடனாக விற்கும் வழக்கம் உண்டு."

திரு. பி. ஏ. தங்கசாமியின் கேள்விகளுக்கு, சாட்சி பதிலளித்ததாவது:—

"எதிரி தங்கராஜு ஒரு மில்லில் வேலை பார்க்கிறார்; அந்த மில்லில் வேலை செய்யும் மற்றும் சிலரை எனக்குத் தெரியும்; ஆனால், அவர்களின் பெயர் தெரியாது; எதிரி முனியாண்டி பகடை, என்ன தொழில் செய்து கொண்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது."

திரு. வி. என். கந்தய்யர் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், சாட்சி கூறியதாவது:—

"எனக்கு தோல் கடை ராமசாமி அய்யரைத் தெரியும்; சம்பவ தினத்தன்று, நான் அவரைப் பார்க்கவில்லை; நான் ஐஸ் புரூட் வாங்கும் கம்பெனி, ராமசாமி அய்யர் கடைக்கு எதிர்புறமாக உள்ளது."

இத்துடன் இன்றைய விசாரணை முடிவுற்றது.

தலைவர்களுக்கு வரவேற்பு

தச்சநல்லூர், டிச. 18—

15—12—53-ல், தோழர்கள் அண்ணாதுரை, நெடுஞ்செழியன் ஆகியோர், தூத்துக்குடி சதி வழக்கு தோழர்களைச் சந்தித்து விட்டு, திருநெல்வேலியிலிருந்து சென்னை போகும்போது, அவர்களுக்கு தச்சநல்லூரில் தோழர் கந்தையா தலைமையில் மலர் மாலைகள் அணிவித்து வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்புக்கு தலைவர்கள் நன்றி கூறி மகிழ்வுடன் சென்றனர்.

கிறித்து அறநெறி மன்றம்

சென்னை புதுப்பேட்டை முற்போக்கு இளைஞர்களால், கிறித்து அறநெறி மன்றம் பொது மக்களிடம்—குறிப்பாக கிறிஸ்தவர்களிடம் முற்போக்குக் கருத்துக்களைப் பரப்ப, 13—12—53-ல், தோழர் ஆ. கு. சுவாமிநாதன் இல்லத்தில் துவக்கப்பட்டது. தோழர்கள் ஆ. கு. சுவாமிநாதன் தலைவராகவும், பொன்முடி செயலாளராகவும், எம் என். ஏ. சாதர் பி. என் வி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவள்ளுவர் பொதுநல கழகம் துவக்க விழா

திருக்கழுக்குன்றம் வன்னிய சத்திரத்திற்கு எதிரில் 20-12-53 ஞாயிறு மாலை 5-மணிக்கு சிறு அமைச்சர் கி. சுப்ரமணியம் தலைமையில் தோழியர் குமாரிதேவி ஆர்யா, வித்வான் கோவிந்தசாமி, புலவர் மன்னன், தோழர் டி. சண்முகம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

ஒய். எம். சி. ஏ மாணவர்கள் விளையாட்டுப் போட்டி பரிசு

21—12—53 திங்கள் மாலை 4 மணிக்கு, அனை பேயர் வேணுகோபால் ராவ் அவர்களால், விளையாட்டுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கப்படும்.

நீத்தார் கடன்

"12-12-53-ல் அன்று, எனது தந்தை சி. மொட்டையப் பிள்ளை அவர்கள் முசிறியில் இயற்கை எய்தினார். 25—12—53 வெள்ளிக்கிழமையன்று, முசிறி, மேலத் தெரு, சி. சின்னையபிள்ளை அவர்கள் வீட்டில், நீத்தார் நினைவுக் கடன் நடைபெறும்" என தோழர் சுப்பிரமணியம் அறிவிக்கிறார்.

'சத்தியாக்கிரகி'களின் கொலு மண்டபத்தில்...!

தி. மு. கழகத் தோழரின் கார் ஜப்தி!

குன்றை, டிச. 15—

ரயில் நிறுத்தப் போரில் கலந்துகொண்டு நவம்பர் 10-ந் தேதியன்று அபராதம் கட்ட மறுத்து ஒரு வார தண்டனை பெற்று வெளிவந்துள்ள குன்றை 10-வது வட்டார தி. மு. கழகச் செயலாளர் ஜே. அமீர் அவர்களின் மோட்டார் அவரையில் ஜப்தி செய்யப்பட்டது.

தோழர் அமீரின் நண்பர்கள், டிரைவர், கிளீனர் ஆகியோர் அபராதத் தொகையைக் கட்டிவிட்டுமோட்டாரை டிச. 11-ம் தேதியன்று திரும்பப் பெற்றுவிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., [illegible]